

# பரலோக பொக்கிஷங்கள்

## ஆவியானவர் நம்மீது தங்குவார்! [யோவான் 1:33]



### பாலைவனத்தை நிரூற்றாய் மாற்றிய விசுவாச பாடல்!

தண்ணீர் வரும் வாய்ப்பே இல்லாத சுடு பாலைவனத்தில், இஸ்ரவேல் ஜனங்கள் மிகுந்த நம்பிக்கையோடு "கர்த்தர் தண்ணீர் தருவார்!" என்ற விசுவாசத்தோடு பாடிக்கொண்டே தோண்டினார்கள் (எண்.21:16,19). ஊற்றுக்கண்ணிலிருந்து தண்ணீர் பொங்கி வந்தது!

ஆம், தண்ணீர் வந்தபிறகு பாடுவது எளிது.... ஆனால், பாலைவனத்தில் சுடு மணலைத் தோண்டும்போதல்லவோ பாடினார்கள்! அவர்களின் பாட்டு, நம் விசுவாசத்தை அனல் மூட்டுவதாய் 'இப்போதும்' உள்ளது!

ஆசீர்வாத ஊற்றுக்களின் 'மாறுவேடமே' சோதனை!

*-tr*



## நீங்களும் சுகம் பெற்று, பிறரையும் சுகப்படுத்துங்கள்!

உங்களுக்கும், உங்களைச் சார்ந்த மற்றவர்களுக்கும் ஆவிக்குரிய சுகம் கொண்டுவர, ஒரே ஒரு வழிதான் உண்டு: நீங்களாக உள்ளத்தில் வைத்து கொண்ட, 'பிறரைக் குறித்த' அபிப்பிராயங்களையும், எண்ணங்களையும் தூர எறிந்துவிட்டு, உங்களை மாத்திரமே நிதானித்து வாழ்வது தவிர வேறு வழியில்லை.....! இப்பொழுது நீங்கள் உணர்ந்து அறிக்கை செய்வதெல்லாம்: 1)தேவன் எனக்கு ஒன்றையும் பிறரைக் குறித்த தீமை வெளிப்படுத்தவில்லை! 2) நான் 'நினைத்ததற்கு' முற்றிலும் மாறாக அந்த சகோதரன் இருக்கிறார்! 3)இதுவரை நானாக சிந்தித்துக் கொண்டதற்கு நேர்மாறாக நான் சிந்திக்கத் துவங்குவேன்! 4)இனியும், அவரைக் குறித்து யாதொரு அபிப்பிராயங்களையும் என் மனதில் வைத்துக் கொள்ள மாட்டேன்! 5)எதுவுமே வெளியரங்கமாய் தெரிந்து கொள்ளாத நான்..... அந்த சகோதரனை குறித்து நான் ஒன்றுமே அறியவில்லை என்பதை இப்போது ஒத்துக்கொள்கிறேன்! காரியத்தின் கடைத்தொகையாய்..... மேற்கூறப்பட்டவைகளின் அடிப்படையில், "ஒருவரைக்குறித்து ஒன்றுமே அறியாத எனக்கு.... இனி அவரை நான் நியாயந் தீர்ப்பதற்கும் எனக்கு ஒன்றுமில்லை!!" என்ற நேர்மையான அறிக்கையே உங்களை பூரண சுகப்படுத்த முடியும்! அதுவே, 'பிறரையும்' சுகப்படுத்தும்!

*-Ed*


**2026 'பரலோக பொக்கிஷங்கள்' சந்தா புதுப்பிக்கவும்**

வருட சந்தா ரூ.170/- தயவுசெய்து உடன் M.O செய்து அல்லது ஆன்லைன் மூலம் கீழ்கண்ட வங்கி கணக்கிற்கு **அக்டோபர் 20-ம் தேதிக்குள்** அனுப்பி புதுப்பித்துக்கொள்ள அன்புடன் வேண்டுகிறோம். ஒரே விலாசத்தில் 3 பிரதிக்கு மேல் ஒரு பிரதி வீதம் ரூ.140/- அயல்நாடு ஒரு பிரதி ரூ.950/- அனுப்ப வேண்டும். புதுப்பித்துக் கொள்பவர்கள், தங்கள் சந்தா எண்ணை குறிப்பிடவும், புதிதாய் வாங்குபவர்கள் 'புதிது' என்று குறிப்பிடவும். நன்றி!

வங்கி கணக்கு: MADURAI CHRISTIAN FELLOWSHIP, Indian Bank - Koodal Nagar Branch
A/c No: **502087685** IFSC Code: IDIB000K150
(வங்கியில் செலுத்தியபின், உங்கள் விலாசம் மற்றும் தகவல் தெரிவிக்கவும்)
பின்பக்கம் உள்ள **QR** கோடு மூலம் **G-Pay** அனுப்பலாம்.



கடித தொடர்பு : பரலோக பொக்கிஷங்கள் 207A - Zaheer Hussain Street, Koodal Nagar, (Thathaneri P.O.) Madurai - 625018, S.India Cell : 98430 49935 Ph (O) 0452 - 7966138
Email: rathnakumar.t@gmail.com தமிழ் வலைதளம்: paralogapokkishangal.com
You Tube : (for Spiritual messages) paralogapokkishangal
You Tube : (for Gospel messages) gospelforall

## ‘பரத்தின் சிந்தை’ கவலை அகற்றும்!

*சிந்தையில் வீணராய் போவது, அவிசுவாசம்*

இரண்டாவது மகா யுத்தத்தில், ராணுவ பாதுகாப்போடு வந்த ஜெர்மன் தேசத்து சரக்கு கப்பல், ஒரு மிஷனெரியை, மூழ்கிக் கொண்டிருந்த பயணி கப்பலிலிருந்து காப்பாற்றினார்கள். அவரை எதிரி நாட்டினுடைய கப்பலிலிருந்து மீட்டபடியால், அந்த மிஷனெரியை சிறையில் அடைத்தார்கள். இருட்டான சிறைக்கூடத்திலிருந்த அவர்: “நான் கர்த்தரை நோக்கி விண்ணப்பித்தேன். அப்போது கர்த்தர்....

> “வானத்தையும் பூமியையும் உண்டாக்கின கர்த்தரிடத்திலிருந்து ஒத்தாசை வரும்.... இதோ இஸ்ரவேலரை காக்கிறவர் உறங்குவதுமில்லை, தூங்குகிறதுமில்லை” (சங்.121:1-4) என்ற வசனத்தை வைத்துப் பேசினார்!

*நான் ஆண்டவரிடம் “ஆண்டவரே நானும் இங்கே தூங்க முடியவில்லை, என்னை காக்கிற கர்த்தாவும் தூங்குகிறதில்லை. நாம் இருவரும் தூங்காமல் இருப்பது சரியல்ல என்றும், என்னை காக்கிற நீர், இந்த கொடிய சிறையில் காரிருளான இந்த இரவு நேரத்தில், எனக்கு சற்று தூக்கம் கொடுத்தால் நன்றி உள்ளவனாய் இருப்பேன்” என நான் ஜெபித்த அடுத்த நிமிடமே நிம்மதியாகத் தூங்கி எழுந்தேன்!*

*பாருங்கள், அந்த மிஷனெரி தன்னுடைய பயத்தையும் அமைதியற்ற சூழ்நிலையையும், ஸ்தோத்திரத்தோடு கூடிய ஜெபத்தை கர்த்தரிடம் வைத்துவிட்டார். அதனிமித்தமாய் ‘தேவ சமாதானம் அவர் உள்ளத்தை ஆட்கொண்டு’ நிம்மதியாகத் தூங்கிவிட்டார். நீங்களும், தேவனை நோக்கிப் பார்த்து ‘ஓர் நன்றியுள்ள மனதோடு’ உங்கள் மனக்கவலைகளை தெரிவித்தால், நிச்சயமாகவே தேவ சமாதானம் உங்கள் இருதயத்தையும் ஆட்கொள்ளும்!*

மன அமைதியை இழக்கச் செய்யும் கவலை வரும் போதெல்லாம் ‘ஜெபமே’ உங்கள் அணுகுமுறையாய்

இருக்கக்கடவது. ஆகவேதான், பிலிப்பியர் 4:6 கூறும்போது 'நீங்கள் ஒன்றுக்கும் கவலைப்படாமல்' எந்த இக்கட்டு நேரத்திலும், ஸ்தோத்திரத்தோடு கூடிய ஜெபத்தை தேவனுக்கு தெரியப்படுத்துங்கள் என கூறுகிறது! ஆனால், இன்று பொதுவாய் கிறிஸ்தவ விசுவாசிகள் செய்வதெல்லாம், தங்கள் வேண்டுதல்களை 'சொந்த விருப்பத்திற்கு' வரிசைப்படுத்தி, ஒரு கடைக்காரனிடத்தில் தேவையான பொருட்களை வாங்குவதற்குத் தரும் பட்டியலைப் போல் மாற்றி விட்டார்கள்!

**"ஆனால், துன்பத்தில் தெய்வ சமாதானம் அடைவதற்குரிய ஆணிவேராக 'உங்கள் சிந்தைகள்' கிறிஸ்து இயேசுவுக்குள்ளாக காக்கப்படுவதே இரகசியமாகும்.**

அதைப் பவுல் உடனடியாக, அடுத்த வசனத்தில் கூறும்போது "உண்மையுள்ளவைகள், ஒழுக்கமுள்ளவைகள், நீதியுள்ளவைகள், கற்புள்ளவைகள், அன்புள்ளவைகள், நற்கீர்த்தியுள்ளவைகள் எவைகளோ.... புண்ணியம் எதுவோ புகழ் எதுவோ" அவைகளையே சிந்தித்துக் கொண்டிருங்கள் என வலியுறுத்திக் கூறினார் (பிலிப்பியர்.4:8).

இப்போது உங்கள் தடுமாறும் நிலையை சீர்ப்படுத்திக்கொள்ள ஆயத்தமாய் இருக்கிறீர்களா? ஏனெனில் "அவன் இருதயத்தின் நினைவுகள் எப்படியோ, அப்படியே அவன் இருக்கிறான்" என்றே நீதிமொழிகள் 23:7-ம் வசனம் எச்சரிக்கிறது.

துயரம் என்னவென்றால், கர்த்தரிடத்தில் ஜெபிக்க வந்த அனேக ஜனங்கள், தங்கள் கடந்த பாவங்களையும், நடந்து முடிந்த சோகங்களையும், என்றோ விளைந்த தீமைகளையும் தங்கள் சிந்தையில் நிறைத்து வைத்திருக்கிறார்கள்!

ஆனால் அப்போஸ்தலனாகிய பவுல் கூறும்போது "கடந்துபோன அந்தகார கிரியைகளுக்கு உடன்பட்டு போய்விடாமல், அவைகளை கடிந்து கொள்ளுதலே தகும்" என கூறினார் (எபே.5:11,13). இப்போதோ, "புண்ணியமான, தேவனுடைய புகழ்ச்சிக்கு ஏதுவானவைகள் எவைகளோ, அவைகளை மாத்திரமே சிந்தித்துக் கொண்டிருங்கள்" என வலியுறுத்திக்கூறினார் (பிலி.4:8).

மீட்கப்படாத மனுக்குலத்தை "தேவன் அவர்களை **கேடான சிந்தைக்கு** ஒப்புக்கொடுத்தார்" (ரோமர் 1:28) என்றே வாசிக்கிறோம். நாம் இரட்சிக்கப்படுவதற்கு முன்பாக, இவ்வித கேடான சிந்தையில்தான் நாம் யாவரும் வாழ்ந்திருக்கிறோம்! ஆகவே "இப்பிரபஞ்சத்தின் தேவனானவன், அவர்கள் மனதை குருடாக்கினான்" என்ற துயரம்

*சம்பவித்துவிட்டது (2கொரி.4:4). அவர்களைத்தான் 'அவிசுவாசிகள்' என்று இந்த வசனம் குறிப்பிடுகிறது. ஆவிக்குரிய மனது குருடாகிப்போன இவர்களால் "நன்மையானவைகளையோ, புண்ணியம் நிறைந்தவைகளையோ, கீர்த்தி நிறைந்தவைகளையோ" அவர்களால் சிந்திக்க முடியவில்லை. அதற்கு மாறாக, அவர்கள் சிந்தையில் வீணராகி "ஒரு சரக்கு ரயில் பெட்டிகளைப்போல்" அவிசுவாசமான துர்ச்சிந்தைகளை இழுத்துக்கொண்டு அல்லல்படுகிறார்கள்!*

**"எனவே, சுவிசேஷத்தின் ஒளியைப் பெற்ற நம்முடைய சிந்தை "தெளிவாகவும், சரியான திசையிலும்" இருப்பது ஓர் ஆச்சரியமான தேவ ஆசீர்வாதம் என்றே கூற வேண்டும்.**

*இவ்வாறு நாம், நம்முடைய சிந்தையில் கொண்ட மனத்தெளிவு "சுவிசேஷம் நமக்கு அளித்த இரட்சிப்பின் தேவ பெலனாயிருக்கிறது" (ரோமர் 1:14). நாம் தேவனையும் தேவனுடைய வசனத்தையும் தியானிப்பது 'கண் மூடித்தனமாய் இருப்பதை' தேவன் ஏற்றுக்கொள்வதில்லை, விரும்புவதுமில்லை! மெய்யான தேவனுடைய இரட்சிப்பு 1)தேவனுடைய சத்தியத்தில் வெளிப்படுத்தப்பட்டவைகளை நம்புவதும் 2) அவைகள் தன் வாழ்க்கையில் நிரூபணமாய் மாற முடியும் என ஏற்றுக்கொள்வதும் 3) தேவன் தந்த 'மனதின் அறிவின்படி' அவைகள் சரியானது என ஏற்றுக்கொள்வதே, மெய்யான விசுவாசமாகும்!*

*இயேசு ஏன் உவமைகளையே எடுத்துப் பேசினார்? என்பதை இப்போது நாம் விளங்கிக்கொள்ள முடிகிறது: "ஆகாயத்துப் பட்சிகளை கவனித்துப் பாருங்கள். அவைகள் விதைக்கிறதுமில்லை, அறுக்கிறதுமில்லை, களஞ்சியங்களில் சேர்த்து வைக்கிறதுமில்லை! ஆகிலும் உங்கள் பரமபிதா அவைகளை பிழைப்பூட்டுகிறார்! அவைகளைப் பார்க்கிலும் நீங்கள் விசேஷித்தவர்கள் அல்லவா?" (மத்தேயு.6:26) என சித்தரித்துக் கூறினார்!*

*இவ்வாறெல்லாம் இயேசு கூறியதற்கு காரணம் என்ன? ஆம், அவருடைய போதக உவமைகளை நம்முடைய* **மனதில் நிறுத்தி, சிந்தையில் வைத்துக்கொள்வதே, விசுவாசமாகும்!** *சிந்தையில் வைத்து தீர்மானிக்காமல், விசுவாசம் இல்லை! எதுவும் புலப்படாத 'ஓர் மாயத்தை நம்புவது' உறுதியான விசுவாசம் அல்ல! நாம் எதுவுமே செய்யாமல் அமர்ந்து கொண்டு 'ஓர் அற்புதம் நடக்கும் என நம்புவதும்' கிறிஸ்தவ விசுவாசம் அல்ல!*

“ *ஆகாயத்துப் பட்சிகளை கவனித்துப் பாருங்கள்! காட்டுப் புஷ்பங்களை கவனித்துப் பாருங்கள்!..... ஆகிய, இயேசுவின் நடைமுறை வார்த்தைகளை சிந்தித்து அடையும் விசுவாசமே தேவனுக்குரியதாகும்.*

*இன்று கிறிஸ்தவ ஜனங்களிடம் காணப்படும் மலிவான, பெலனற்ற விசுவாசத்திற்கு காரணம் என்னவென்றால்* “*அவர்களுடைய* **சிந்தைகளை விசுவாசம் ஆளுகை செய்யவில்லை!** *அவர்களோ, வேறு பல பிரச்சனைகளால் தங்கள் சிந்தையில் ஆட்கொள்ளப்பட்டிருக்கிறார்கள்! அதுபோன்ற சிந்தைகளை தேவனுக்கேற்ற சிந்தை என்று சொல்லாதிருங்கள்! மாறாக, தேவ வசனங்களை மனதில் வைத்து, சிந்திக்க மறுத்ததே உங்கள் தோல்வி, என்பதை அறிந்து மனம் திரும்புங்கள்! ஏனெனில்* “*கர்த்தருடைய வேதத்தில் பிரியமாயிருக்கும் இனிமையை*” *இந்நாட்களில் அநேகர் காணவில்லை, ருசிக்கவுமில்லை!*

*எது, எதையோ ஏராளமாய் சிந்திப்பதின் விளைவுதான் இந்த கவலை என ஜனங்கள் எண்ணிக்கொள்கிறார்கள். ஆனால், உண்மை என்னவென்றால்* “**செம்மையானவைகளை**” **இவர்கள் தங்கள் மனதில் வைத்து சிந்திக்கவில்லை** *என்ற விளைவுதான், இவர்கள் அனுபவித்திடும் கவலை! தேவன் யார் என்று அறிவதற்கும், அவர் தந்த வாக்குதத்தங்களை அறிவதற்கும், தங்கள் மீது அவர் வைத்திருக்கும் நோக்கங்களை அறிகிறதற்கும், அவர்கள் ஆரோக்கியமான சிந்தை கொள்ள ஆரம்பித்துவிட்டால், நான் உங்களுக்கு உறுதியாக கூறுகிறேன்: ‘இனிமேல் நீங்கள் கவலைப்பட மாட்டீர்கள்!’ ஆமென்.*

*- ஜான் மேக் ஆர்தர்*

---

## பிறருடைய காரியத்தில் தலையிட்டு துன்புறுவது, பாவம்!

*‘தேவ பக்தியே’ உங்கள் சொந்த அலுவலாகட்டும்*

*தேவனுடைய வார்த்தைகளைக் கேளுங்கள்: பேதுரு தன் ஆண்டவரை நோக்கி* “**இவன் காரியம் என்ன?**” *என்று கேட்டார். “உனக்கு ஏன் இந்த பிறர் விஷயத்தைக் குறித்த தலையீடு? நீ என்னைப் பின்பற்றி வா!” என இயேசு கூறிவிட்டார் (யோவான்.21:22* Amplified*). இந்த வார்த்தையை நாம் யாவருமே நமது வாழ்விற்கு போர்களத்தின் முழக்கமாகவும், தலையாய கோட்பாடாகவும் வைத்துக்கொள்வோமாக!*

*தங்கள் அலுவலைப் பார்ப்பதற்கு உண்மையுள்ளவர்களாயும், வைராக்கியமுள்ளவர்களாயும் இருப்பதற்குப் பதிலாக, மற்றவர்கள் காரியத்தில் தங்களைப் புகுத்திக் கொள்ளும் இத்துர்நாற்றமான*

*கொள்ளை நோயைக் குறித்து, 1பேதுரு 4:5-ம் வசனத்தில் இன்னமும் சற்று வெளிப்படையாய் விவரிக்கப்பட்டுள்ளது: "உங்களில் ஒருவன் எக்காரணம் தொட்டும் கொலை பாதகனாவது, திருடனாயாவது, பொல்லாங்கு செய்தவனாயாவது, மற்றவர்கள் காரியங்களில் தலையிட்டுக் கொண்டவனாயாவது, பாடுபடுகிறவனாய் இருக்கக் கூடாது" என்பதுதான். மற்றவர்கள் காரியத்தில் தலையிட்டுக் கொள்வது எத்தனை மதியீனம் என இவ்வசனம் தெளிவுபடுத்துகிறதே! இன்னொருவர் காரியத்தில் தங்களை நுழைத்துக் கொள்பவர்கள் யார் தெரியுமா? கொலைகாரர்களோடும், திருடர்களோடும் இந்த வீண் அலுவல்காரர்கள் கைகோர்த்து விட்டார்கள்! இவர்கள் சம பங்காய் சம்பாதித்து வாரிக் கொள்வதெல்லாம், தேவையில்லாத பாடுகள்தான்!*

> *மற்றவர்களுக்கு என்ன நடந்தது என்ற ஆர்வமும், அதன் பொருட்டு பிறரை தீர்ப்புகூறி விமர்சிப்பதும் நம்மில் கட்டோடு ஒழியக்கடவது! இதில் நமக்கு எந்த காரியமும் கிடையாது! நம் காரியமெல்லாம், எல்லா பெரிய அல்லது சிறிய விஷயத்திலும் கிறிஸ்துவை 'சீரியஸான' உண்மையோடு பின்பற்றுவதுதான்! பூமிக்குரிய அல்லது ஆவிக்குரிய காரியங்களில் நாம் தொடர்ச்சியான உண்மையோடு ஜீவிக்கிறோமே, அது ஒன்றே நம் காரியம்! அடுத்து? ஒன்றும் இல்லை! அப்படியானால் நீங்கள் மற்றவர்கள் காரியங்களுக்குத் தூர.... தூர விலகி நிற்க வேண்டியது தானே! இதற்கு கைமாறாக, தொடர்ச்சியான மகிழ்ச்சியும், சமாதானமும், தேவனுக்குள்ளாய் அனுபவிக்கும் அற்புத இளைப்பாறுதலும் உங்களில் பொங்கி வழியும்! மற்றவர்கள் என்ன சொல்கிறார்கள்? அல்லது என்ன செய்கிறார்கள்? அல்லது என்னத்தை செய்யாது விட்டார்கள்? இதுவெல்லாம் அவர்களுடைய காரியம்! இதில் நமக்கு எந்த அலுவலும் கிடையவே கிடையாது!*

> **"யாரேனும் நமக்கு அநீதியான தீங்கு செய்தால் செய்யட்டும். அது அவர்களின் காரியம்! இந்த அநீதியிலும் நாம் பொறுமையுடன் நடந்து, தீமைக்கு நன்மை செய்கிறோமே, அது ஒன்றே நம் காரியம்! இது, பரலோகத்தைப் பூலோகில் 'வருக!' என வரவேற்றுக் கொண்டு வருவது நிச்சயமல்லவா!**

**சாத்தானுக்கும், அவனுக்குரிய அலுவல் உண்டு.** *நம்மை அவன் சோதிக்கக் கூடுமானால், அச்சோதனையில் நம்மை வீழ்ச்சியடையச் செய்வதும், நம்மை அதைரியப்படுத்துவதும், சோர்வுற்று நம் நம்பிக்கையை இழக்கச் செய்வதும், அவனுடைய அலுவல்! அவன் தன்*

அலுவலை எவ்வளவு மூர்க்கமான வைராக்கியத்தோடு நிறைவேற்றத் துடிக்கிறான் என்பதைப் பாருங்கள்!

**நம் நேச ஆண்டவரின் காரியம் என்ன தெரியுமா?** நாம் சோதனையைத் தாங்க முடியாத அளவிற்கு, திராணிக்கு மேல் சோதிக்கப்படாதபடி கரிசனையாய் கண்காணிப்பதுதான்! (1கொரி.10:13). இது எத்தனை பெரிய ஆறுதல்! இது நம்மை ஆழமான நம்பிக்கைக்குள் நடத்தி, ஆண்டவர் தன் ஆசீர்வதிக்கப்பட்ட கிரியையை அப்பழுக்கில்லாத உண்மையோடு நம்மில் செய்து முடிப்பார், என்ற எதிர்காலத்திற்குரிய உத்திரவாதத்தை நமக்கு கையளிக்கிறதே!

**நம்முடைய காரியம் என்ன?** ஜீவியத்தில் நூற்றுக்கு நூறு உண்மையாய் இருத்தல்! திடமாய் நின்று, எல்லா சோதனைகளையும் ஜெயித்து வெற்றி வாகை சூடுதல்! சாத்தான் நம்மைக் கண்டாலே, அலறிப் புடைத்து ஓடும்படியாக, அவனைக் கடுமையாய் எதிர்த்து நிற்பது! ஆகிய இவைகள் மாத்திரமே!

இவ்வாறு, நம்முடைய காரியத்தில் மாத்திரமே நாம் தீவிரம் கொண்டிருந்தால், ஆண்டவர் நமக்கு உண்மையுள்ளவராய் இருந்து நம்மைப் பெலப்படுத்துவார்! ஆம், அது அவர் காரியமல்லவா! இவ்விதமாய் நம்மை ஆசீர்வதிப்பதுதான் அவருடைய காரியம்! அதில் அவர் ஒருபோதும் மெத்தனமாய் இருக்கவே மாட்டார்! நாம் மற்றவர்கள் காரியத்தில் தலையிட்டு, நமக்குத் தேவையில்லாத உபத்திரவங்களில் சிக்கிக் கொள்வது இல்லை என்பதை இப்போது தேவன் உங்களில் காண்பார்!

> **“ஆனால் அதே சமயம், நம் வாழ்க்கையில் நாம் சந்திக்கும் “அவசியமான” உபத்திரவங்களில் உறுதியாய் நின்று, கர்த்தருக்கு சாட்சியாக அவைகளை ஜெயித்து வருவதையும் தேவன் காண்பார்.**

இப்படி அவர் நம்மைக் காணமுடியுமென்றால், இது போதுமே! இப்போது என்ன செய்வார் தெரியுமா? நம்மை முடிவில் ‘ஜீவ கிரீடம் சூடும்படி’ செய்வதற்கான பொறுப்பை அவரே எடுத்துக் கொள்வார்!

இனிமேலாவது, மற்றவர்கள் காரியத்தில் தலையிடும் இழிசெயலுக்கு முற்றுப்புள்ளி வைத்திடுங்கள்! தேவனுடைய காரியத்திலும் உங்களை ‘நுழைத்து’ அவரை கேள்வி கேட்காமலிருங்கள்! கடைசியாக, சாத்தான் அலுவலிலும் அக்கறை கொள்ளாதீர்கள்! மாறாக, இதுவரை நீங்கள் அக்கறை கொள்ளாத அளவு, இனிமேல் உங்கள் அலுவலைப் பார்ப்பதற்கு அக்கறை கொள்ளுங்கள்! ஆமென்.

*- எலியாஸ் அஸ்லாக்சன்*

## ‘தேவ சமூகமே’ என் ஜெபத்தின் இலக்காய் மாறியது!

*அவர் இருக்கும் இடத்தில், நான் இருக்க விரும்பினேன்*

*ஒரு சமயம் என் அப்பாவின் தூர சொந்தக்காரரான ‘வயதான அம்மையார்’ என் வீட்டிற்கு வந்தார்கள். சில காலம் தங்குவதற்கு பக்கத்திலிருந்த வாடகை வீட்டை என் தந்தை ஏற்பாடு செய்து கொடுத்தார். அந்த அம்மையாரிடம் காணப்பட்ட பரிசுத்தமும், ஆழமான ஜீவியமும் என்னை கவர்ச்சித்தது! நான் தேவனை அளவில்லாது நேசிப்பதைக் கண்டு, அந்த அம்மையார் மகிழ்ச்சி அடைந்தார். “குறைந்த வயதுடைய நீ (அப்போது எனது வயது19) தேவன் மீது வைத்திருக்கும் அலாதி அன்பைக் கண்டு வியக்கிறேன்” என அன்புடன் கூறி தழுவிக் கொண்டார்கள்!*

*அவர்கள் பேசிய வார்த்தையை விட, மாதிரியான அவர்களது ஜீவியம் எனக்கு ஏராளமான பாடங்களை கற்றுக்கொடுத்தது!* **அவரது முகத்தில் எப்போதும் ‘நீங்காத தேவனுடைய சமூகம்’ தங்கியிருந்தது.** *இங்குதான், நான் ஒரு வித்தியாசம் கண்டேன். பரிசுத்த ஜீவியம் வாழ்ந்திட, என்னுடைய தீராத முயற்சியில் நான் பெற்றுக் கொண்டது கொஞ்சம்.... ஆனால் அந்த அம்மையாரோ, எளிமையான ஜெபத்தின் அனுபவத்தைப் பெற்றிருந்தார்கள்.*

*என் சொந்த முயற்சியின் பரிசுத்தத்தைவிட ‘எளிய ஜெபத்திற்கு’ அதிக வலிமை இருப்பதை, நான் கண்டு வியந்தேன்! அவர்களிடம் காணப்பட்ட இடைவிடாத ஜெபத்தின் ஆவி அளவிட முடியாததாயிருந்தது. என்னுடைய வாஞ்சையை அறிந்த அவர்கள், “எளிய ஜெபத்திற்கு வழி வகுப்பதெல்லாம், பரிசுத்த சிந்தையும், தேவனுக்குப் பயந்து, பாவத்தை வெறுத்து விலகிவாழும் ஜீவியமே!” என வலியுறுத்தினார்கள்.*

**“ மேலும் அவர்களது ஜெபத்தில், அவர்களது ஜெப வார்த்தையை விட ஜெப தூபமான இனிய ஆவி, மிக வலிமையாயிருந்ததைக் கண்டு பரவசமடைந்தேன்.**

*சில நாட்களுக்குப் பிறகு, என் தந்தையிடமிருந்து அவர்கள் விடைபெற்றுச் சென்றார்கள். அவர்கள் சென்றவுடன், உள்ளம் உடைந்து தேவ சமூகம் சென்று.... “ஓ என் திவ்விய அன்பே! நீர் எனக்கு காண்பித்த கிருபை பெரிது. உம்மை நான் பிரியப்படுத்தும்படி கொண்ட விருப்பம், வடித்த கண்ணீர், தீவிர விடாமுயற்சி..... ஆகிய என் பிரயாசங்கள் கொஞ்சமே பலன் தந்தது கண்டு, என்னில்*

*அன்புகூர்ந்து, உம்மை நெருங்கி வரும் முன்னேற்றப் பாதையை என் வீட்டிற்கு வந்த இந்த அம்மையார் மூலம் காட்டியுள்ளீர். துன்பங்களும் சோதனைகளும் நிறைந்த இவ்வுலக சமுத்திரத்தில், கை துடுப்பினால் பாடுபட்டு படகை ஓட்டி உம்மிடம் வந்து சேர முயன்ற என்னில், 'ஜெப ஜீவியமான' உம்முடைய திவ்ய சுவாசத்தின் கிரியையை எனக்குள் வைத்துவிட்டீர்! இனி நான், "கை துடுப்பல்ல" பாய்மரத்தின் வேகத்தில் எளிதாய் உம்மை நெருங்கிச் சேரும் பாக்கியம் பெற்றேன்" என, அந்த அம்மையார் போதித்த எளிமை ஜெபத்தின் ஆச்சரியத்தில், ஏக்கமுடன் ஜெபித்தேன்!*

*ஆகவே, நீண்ட கடும் பிரயாச ஜெபத்தை விட 'எளிமையான ஜெபமே'* (Simple manner of Prayer).... *வார்த்தையை விட அதிக வலிமை கொண்டது என்ற உண்மை என் உள்ளத்தில் விளக்கேற்றிவிட்டது!*

*"ஓ என் நேசரே, பண்டைய பூர்வீகத்தையும், புதுமையையும் கொண்டவரே, உம்மை அடைவதற்கு இவ்வளவு காலம் தாமதமாகி விட்டதே, அது என் மதியீனம்! நீர் இல்லாத இடத்தில் உம்மைத் தேடினேன். நீர் இருக்கும் இடத்தில் உம்மைத் தேடாமல் போய்விட்டேன். இப்போது நான், உம்முடைய ஆனந்த சுவிசேஷம் விளங்கிக் கொண்டேன். அன்று நீர் வாய் திறந்து கூறிய 'தேவனுடைய ராஜ்ஜியம் பிரத்தியட்சமாய்.... வெளித்தோற்றத்தில் இல்லை! தேவனுடைய ராஜ்ஜியம்* **உங்களுக்குள் இருக்கிறது!**' *என நீர் கூறியதை நான் இப்போது அனுபவித்திட உம்பாதம் சரணடைந்தேன். என் இதய வாசஸ்தலத்தில் நீர் ராஜனாய் வீற்றிருக்கிறீர்.* **என் இதயமே உமது ராஜ்ஜியம்!** *இங்கிருந்துதான் உமது மேலான தூய விருப்பத்தை நிறைவேற்றும்படி செய்கிறீர்!" என கண்ணீரோடு ஜெபித்து அவரது பாதத்தை, இறுகப்பிடித்துக்கொண்டேன்!*

*- மேடம் குயான்*

---

## வாழ்விலும் நீர்! சாவிலும் நீர்! என்பதே உறுதியான விசுவாசம்!

*எந்நிலையிலும் கர்த்தரை நம்பி வாழுங்கள்*

**நா**ம் கிறிஸ்துவை பற்றிக்கொண்டு வாழும் 'விசுவாசத்திற்கு' நம்மை எவ்வளவு 'அவரை நம்பி' ஒப்புக் கொடுத்திருக்கிறோம்? என்பதை வைத்தே அல்லாமல், வேறு எதை வைத்தும் ஒருவன் கிறிஸ்துவுக்குள் தான் நிலைத்து வாழ்வதை நிரூபிக்க இயலாது.

> **"விசுவாசத்தை பற்றிக்கொண்டு வாழ்பவர்களை, அந்த விசுவாசம் கட்டளையிட்டு அவர்களை நடத்த முடியவில்லையென்றால், அதை மாய - விசுவாசம் என்று மாத்திரமே அழைத்திட முடியும்!**

*இதனிமித்தமே, இன்று சிலர் முக-முகமாய் தங்கள் விசுவாசத்தை திடீரென்று சந்திக்க வேண்டிய சூழ்நிலை நேரத்தில் "நடைமுறை அக்கினி மயமான ஜீவியத்திற்கு முன்பாக" தாங்கள் சோதிக்கப்பட நிறுத்தப்பட்டோம் என்பதை அறிந்து, அதிர்ச்சி அடைகிறார்கள்!*

*இன்று அனேகர் 'மிகுந்த திறமைகொண்டு' கிறிஸ்தவ விசுவாசத்தினிமித்தம் 'இக்கட்டான சூழ்நிலைக்குள்' அகப்பட்டுக் கொள்ளாதபடி தங்கள் காரியத்தை ஒழுங்குபடுத்திக் கொள்கிறார்கள். 'திவ்விய உதவி' இல்லாமலே காரியத்தை சாதித்து விடலாம் என்ற எண்ணத்தை வைத்துக்கொண்டு, மனுஷீக பெலத்தோடு தாங்கள் நினைத்ததை அடைய கடுமையாய் போராடுகிறார்கள்! "எங்களுக்கு கர்த்தரே எல்லாமுமாய் இருக்கிறார்" என வாய் பேச்சில் அவரை மகிமைப்படுத்துவதைப்போல் செய்துவிட்டு "கர்த்தரை சார்ந்து வாழும் நிர்ப்பந்தத்திற்குள்" சிக்கி கொள்ளாமல் இருக்க, கவனமாய் தங்களை பாதுகாக்கிறார்கள்.*

*இன்று கிறிஸ்தவர்கள் மெய்யாகவே இப்படித்தான் ஜீவிக்கிறார்களா? என் நீங்கள் அதிர்ச்சி அடையக்கூடும்! ஆம், எரேமியா 17:9 கூறுகிறப்படி "எல்லாவற்றைப் பார்க்கிலும் இருதயமே திருக்குள்ளதும் மகா கேடுள்ளதுமாயிருக்கிறது, அதை அறியத்தக்கவன் யார்?" என வேதம் வியப்படைவதைப் பாருங்கள்.*

*'மாய விசுவாசம்' தேவன் தோற்றுப்போய்விட்டால், தனக்கென வேறு ஒரு வழியை ஆயத்தம் செய்து வைத்திருக்கும்! 'மெய் - விசுவாசமோ' தேவன் ஒருவரையே வழியாகக் கொண்டிருக்கும்! அவரைத் தவிர, வேறு ஒரு வழிதேடும் சந்தர்ப்பத்தை முற்றிலும் தன்னைவிட்டு புறக்கணித்திடும். ஏன் தெரியுமா?*

> "
> **மெய் - விசுவாசத்தின் கதி என்னவென்றால் "தேவன் ஒருவரே எனது கதியாய் இருக்கட்டும்! அப்படியில்லையென்றால், நான் சாவதற்கும் ஆயத்தம்" என்பதாகவே இருக்கும்!**

*ஆதாம் தன்னந்தனியாக 'என்று' இந்த பூமியில் நிற்க வேண்டிய நிலை ஏற்பட்டதோ, அன்றிலிருந்து 'இன்று வரை' தன்னை நம்பி வாழும் ஒரு மனுஷனையோ அல்லது ஒரு மனுஷியையோ 'கை கொடுத்து ஆதரிக்காமல்' தேவன் இருந்ததே இல்லை!*

*மாய விசுவாசம் கொண்டவர்கள் "விசுவாசப் பிரமாண கொள்கையில்" தாங்கள் உறுதியாய் இருப்பதைப்போல் பேசிக் கொள்வார்கள். ஆனால், எதிர்காலத்தில் 'தங்கள் விசுவாச பிரமாணத்தை சார்ந்து கொள்ளும் நிலைமையை' சாமர்த்தியமாய் மறுத்து, தங்கள்*

'சுய - பெலத்தோடு' விசுவாச பிரமாணத்திற்கு தூரமாய் நின்று விடுவார்கள்! இவர்கள் எப்போதுமே, தாங்கள் தப்பிக்கும் வழியை 'கூரையை - பிய்த்துக்கொண்டு' செல்ல வேண்டியிருந்தாலும், அதையும் தயார் நிலையில் வைத்திருப்பார்கள்!

**"இன்று கிறிஸ்தவத்தின் அவசரத் தேவை என்ன தெரியுமா? இன்று தேவனையே முழுமையாய் நம்பியிருக்கும் ஒரு சிறிய கிறிஸ்தவ சேனை, கடைசி நாள் வரைக்கும் தங்கள் தேவனையே நம்பி வாழ ஆயத்தம் கொண்டவர்களாயிருக்க வேண்டும்!**

நம் எல்லோருக்குமே, 'தேவன் ஒருவரைத் தவிர' வேறு எல்லாவற்றையும் இழக்கும் நேரம் வரத்தான் போகிறது! ஆரோக்கியமோ, ஆஸ்தியோ, நண்பர்களோ, மறைந்து கொள்ளும் ஒளிப்பிடமோ..... ஆகிய அனைத்தும் வாரிக் கொள்ளப்பட்டு 'தேவன் ஒருவர் மாத்திரமே காணப்படும்' நிலைமை ஏற்படும்! இதுபோன்ற நிலைமை, மாய - விசுவாசம் கொண்டவர்களுக்கு, மகா பயங்கரமான நிலைமையாய் இருக்கும்! ஆனால், மெய் விசுவாசம் கொண்டவர்களுக்கோ, இதுபோன்ற நிலைமை அவர்களுடைய உள்ளத்திற்கு மிகுந்த ஆறுதலைத் தருவதாயிருக்கும்!

**"எல்லாம் கைவிட்டுப்போன பிறகு, 'தேவன் ஒருவர் மாத்திரமே இருப்பதை காண்பதற்கு' ஏற்படும் நிலைமை பரிதாபகரமேயாகும்! ஏனெனில், இந்த பூமியில் அவர்கள் பயணித்த நாட்களெல்லாம் "தாங்கள் தேவனை மாத்திரமே, நம்பி வாழவில்லை!" என உணரும் பரிதாபமேயாகும்!**

ஆகவேதான் 'இப்போதாவது' தேவனை வருந்தி அழைத்து "தேவா, பொய்யானதை நம்பியிருந்த எல்லா நம்பிக்கையிலிருந்தும் என்னை நீங்கலாக்கி, இரட்சித்தருளும்!" என வேண்டுதல் செய்வோமாக.

மேலும் "தேவா, எங்கள் இருதயங்கள் நம்பியிருந்த இரகசியமான மறைவிடங்களிலிருந்து என்னை வெளியே கொண்டு வந்து, நாங்கள் மெய்யாகவே உம்மை மாத்திரமே நம்பி வாழ்கிறோமா? இல்லையா? என்பதைக் கண்டறிய எங்கள் மனக்கண்களைத் திறந்தருளும்" எனவும் வேண்டி நிற்போமாக. நம் அவிசுவாசத்தின் சிக்கலான பிரச்சனைகளுக்கு, இது ஒன்றே விடுதலை வழங்கும் வழியாய் இருக்கிறது! இதை கொஞ்சம் மென்மையாய் கையாளலாம் என்று நீங்கள் எண்ணினால், உங்கள் கையிலிருந்து காலம் கடந்து சென்றுவிடும்!

*- A.W.டோசர்*

## நிலைத்திருக்கும் தேவ ராஜ்யத்திற்கு, இயேசுவே இராஜா!

*தேவராஜ்ய புத்திரர்களாய் மாறுவது, பாக்கியம்*

*இராஜாவை ஏற்படுத்த, தேவன் இடங்கொடுத்த போதிலும், அது அவருடைய சித்தத்திற்கு விரோதமானதால், 'பழைய ஏற்பாட்டு' இராஜ்யபாரம் எதுவும் தழைத்தோங்கவில்லை! முக்கியமாக, அந்த அதிகாரப் பெருமை, பக்தனான தாவீதையுங்கூட சில சமயங்களில் கெடுத்தது. கொலை பாதகத்துக்கும், துணிகரமான பாவத்துக்கும், அவரை ஏவி விட்டது! அதனிமித்தம் அவரடைந்த சிறுமையும், செய்த அறிக்கையும், சிந்தின கண்ணீரும் கொஞ்சமல்ல.*

> **"'தேவ ஆளுகையை' ராஜாக்கள் தங்கள் கையில் எடுத்துக் கொள்ளும்போது இராஜ்யமும், குடிகளும் ஏகமாய் அழியும்!**

*ஜனங்கள் கிறிஸ்துவை உலக இராஜாவாக்கும்படி தீர்மானித்து 'முடிசூட்ட' நெருங்கினபோது, கிதியோன் செய்ததுபோல அவர் ஏன் விலகி ஓடினார்? ஏனெனில்,* **தேவ ஆளுகையே தேவசித்தம்! தேவ ஆளுகையே உலகத்துக்கு ஆசீர்வாதம்!** *தேசத்தின் இவ்வித நிலைமையான விசுவாசத்தில்தான், கிறிஸ்து வந்தார்! ஆகிலும், ஜனங்கள் பல விதத்தில் பெருக்கமடைந்து, மேசியா வர மாட்டாராவென்று ஆவலோடு காத்திருந்த காலம் அது! இராஜ்யம் என்பது அவர்கள் அறியாத பாஷையல்ல. இச்சமயத்தில் "இராஜ்யம் சமீபம்" என்னும் சத்தம் பாலஸ்தீனாவில் தொனித்தது. யோவான் ஸ்நானகன் "மனந்திரும்புங்கள், பரலோக இராஜ்யம் சமீபித்திருக்கிறது" என்று அறிவித்தார்! இரட்சகரும் "மனந்திரும்புங்கள் பரலோக இராஜ்ஜியம் சமீபித்திருக்கிறது" என்றே பிரசங்கித்தார்!*

> *'**இ**ராஜ்யம் வருகிறது' என்னும் சப்தம், யூதர்களுக்கு மகா சந்தோஷமாக இருந்தது. "மனந்திரும்புங்கள்" என்பதும், "சுவிசேஷத்தை விசுவாசியுங்கள்" என்பதும் அவர்கள் செவியில் ஏறவில்லை! 'இராஜ்யம் வருகிறது' என்பதை மாத்திரம், எல்லாரும் பிடித்துக் கொண்டார்கள். அந்த இராஜ்யத்தின் தன்மை இன்னதென்பதையோ அறியாமற்போனார்கள், அறிந்திட ஆர்வம் கொள்ளவும் இல்லை! தன்னை கிறிஸ்து என்றோ, தேவ குமாரன் என்றோ, இராஜா என்றோ, ஆரம்பத்தில் பகிரங்கமாய் இயேசு சொல்லவில்லை! தம்மை* **மனுஷகுமாரன்** *என்னும் பேராலேயே அழைத்து வந்தார். அவர் பிலாத்துவுக்குமுன் நின்றபோது: "என் இராஜ்யம் இவ்வுலகத்திற்குரியதல்ல. என் இராஜ்யம் இவ்வுலகத்துக்குரியதானால், என் ஊழியக்காரர் எனக்காகப்*

போராடியிருப்பார்களே; இப்படியிருக்க என் இராஜ்யம் இவ்வுலகத்திற்குரியதல்ல" என்றார். ஆகையால், கிறிஸ்து யூதருடைய இராஜ்யத்தை ஸ்தாபிக்க வந்தவரல்ல என்பது தெளிவு!

"அப்படியானால், அவர் தம்மை இராஜாவென்று சொன்னதில் பிரயோஜனம் என்ன? அவர் ஸ்தாபிக்க வேண்டிய இராஜ்யம் எங்கே? அவர் பிரசங்கித்த இராஜ்யமோ தேவனுடைய இராஜ்யம். அதில் பிரவேசிப்பதற்கு மனந்திரும்புதல், மறுபிறப்பு, சுவிசேஷத்தை ஏற்றுக்கொள்ளுதல் அவசியம்!

நீ மறுபடியும் பிறக்காவிட்டால் தேவனுடைய இராஜ்யத்தை காணவுமாட்டாய், அதில் பிரவேசிக்கவு மாட்டாய்! என்று நிக்கொதேமுவுக்குத் திட்டமாய் சொன்னார். யூத ஜனங்களோ இந்த 'உள்ளான' ஆவிக்குரிய மாறுதலை தள்ளிவிட்டுத் தங்கள் இச்சைக்கேற்ற 'புறம்பான' உலக ராஜ்யத்தையே தேடினார்கள்!

தாவீதின் இராஜ்யமோ உலகத்திற்குரியது. அது எவ்வளவு மேன்மையோடு ஆளப்பட்டாலும், அந்த இராஜ்யத்திற்கு முடிவு வரும்! உலக இராஜ்யங்கள், மாறாமல் என்றென்றைக்கும் நிலைத்திருப்பதில்லை. கிறிஸ்துவைக் குறித்தோ, அவர் என்றென்றைக்கும் அரசாளுவார் என்றும், **அவருடைய ராஜ்யத்துக்கு முடிவிராது** என்றும் சொல்லியிருக்கிறது! தேவ ராஜன், அழிந்து போகக்கூடிய உலக இராஜ்யத்தை ஸ்தாபிப்பதெப்படி? அவர் தீர்க்கதரிசி என்பதற்கு மோசே முன்னடையாளமும், அவர் பிரதான ஆசாரியன் என்பதற்கு ஆரோன் முன்னடையாளமுமாயிருந்ததுபோல, கிறிஸ்துவே இராஜா என்பதற்கு, தாவீது முன்னடையாளமாக இருந்தார்!

ஆண்டவர் பிரசங்கித்த ஆவிக்குரிய தேவ ராஜ்யம் பெந்தெகொஸ்தே நாளில் ஸ்தாபிக்கப்பட்டது. அந்த இராஜ்யம் ஸ்தாபிக்கப்படுமுன், கிறிஸ்து மரிக்க வேண்டியது அவசியம்! சிலர் நினைக்கிறபடி கிறிஸ்துவின் மரணத்தால் தேவராஜ்யம் தவறிப்போனது என்று நாம் சொல்லாமல், **அவர் மரணத்தின் மூலமாகவே** தேவ இராஜ்யம் ஸ்தாபிக்கப்பட்டதென்று வேதம் சொல்லுகிறது!

மேலும், பரிசுத்த ஆவி அருளப்பட வேண்டுமானால் கிறிஸ்து மகிமைப்படவேண்டும்! அவர் மகிமைப்படுமுன் 'பாடுபட்டு' மரிக்க வேண்டும். "கிறிஸ்து இவ்விதமாகப் பாடுபடவும், தமது மகிமையில் பிரவேசிக்கவும் வேண்டியதில்லையா?" என்று ஆண்டவர் உயிர்த்தெழுந்தபின்பு, சீஷரின் அவிசுவாசத்தினிமித்தம் அவர்களைக்

*கடிந்துகொண்டார். "இயேசுஇன்னும்மகிமைப்படாதிருந்தபடியினால் பரிசுத்தஆவிஇன்னும்அருளப்படவில்லை" என்றும்சொல்லியிருக்கிறது.*

> **"ஆகையால் ஆவிக்குரிய தேவனுடைய இராஜ்யம் ஸ்தாபிக்கப் படுவதற்கு பரிசுத்த ஆவியானவர் பிதாவிடமிருந்து உலகத்துக்கு அனுப்பப்பட வேண்டும். ஆவியானவர் அருளப்படுவதற்கு கிறிஸ்து பாடுபட்டு மரித்து, உயிர்த்தெழுந்து பரத்திற்குப்போய், பிதாவினால் மகிமையடைந்து, இராஜ்யத்தைப் பெற்றுக்கொள்ள வேண்டும்!**

*எனவேதான், யூதர்கள் கிறிஸ்துவைப் புறக்கணித்துச் சிலுவையில் அறைந்து கொன்றதால், தேவராஜ்யம் தவறிப்போகாமல், அது பலமாய் ஸ்தாபிக்கப்படுவதற்கு ஏதுவாயிற்று! யூதர்களுடைய பகை, தேவ ஏற்பாட்டை நிறைவேற்றினதேயல்லாமல், அதைக் குலைத்துப்போடவில்லை. "தேவன் நிர்ணயத்திருந்த ஆலோசனையின் படியும், அவருடைய முன்னறிவின்படியும்* **ஒப்புக்கொடுக்கப்பட்ட அந்த இயேசுவை** *நீங்கள் பிடித்து அக்கிரமக்காரருடைய கைகளினாலே சிலுவையில் ஆணியடித்துக் கொலை செய்தீர்கள்" என்று யூதரைப் பார்த்து பேதுரு சொன்னது சரியே! (அப்.2:23).*

*இந்த தேவ ஒழுங்கின் இரகசியத்தைச் சீஷர்கள் ஆரம்பத்தில் அறிந்துகொள்ளவில்லை. அவர்களுக்கு 'இராஜ்யம்' வரப்போகிற தென்பதே ஆனந்தமாயிருந்தது. அதைக்குறித்து அடிக்கடி பேசினார்கள். அவ்வாறு இராஜ்யம் வரும்போது, தங்களில் யார் அதில் பெரியவனாயிருப்பதென்பதைக் குறித்தும் அடிக்கடி அவர்களுக்குள் தர்க்கம் உண்டானது! இந்த தப்பெண்ணமும் தர்க்கமும் கடைசிவரை அவர்களிடத்தில் இருந்தது!*

> ***தே**வராஜ்யத்தை ஸ்தாபித்த கிறிஸ்துவோ, தாமே அவர்களுக்கு இராஜாவென்றும், அவர்களுக்குள் பெரியவன் சிறியவன் என்றில்லாமல் எல்லாரும் சகோதரராயிருக்க வேண்டுமென்றும், தன் சீஷர்களுக்கு ஆரம்பத்திலேயே போதித்தார்! கிறிஸ்துவும் அதையே திரும்பவும் எடுத்துக் காண்பித்தார்: "என் சீஷர்களே, புறஜாதிகளுக்குள் கடினமாயும் இறுமாப்பாயும் ஆளுகிறவர்கள், அதிகாரிகள் என்று எண்ணப்படுகிறார்கள். உங்களுக்குள்ளே அப்படியிருக்கக்கூடாது!" என்றார். "உங்களில் எவனாகிலும் தேவ இராஜ்ஜியத்தில் முதன்மையானவனாயிருக்க விரும்பினால், அவன் எல்லாருக்கும் கடையனானவனும் எல்லாருக்கும் ஊழியக்காரனுமாயிருக்கக்கடவன்! நானோ உங்கள் நடுவில் பணிவிடைக்காரனைப்போல் இருக்கிறேன்" என்று சொல்லி, தேவ ராஜ்யத்தின் சிறந்த இலட்சணம்* ***தாழ்மையே*** *என்று போதித்தார்.*

*அவர்கள் அவரோடு கூடயிருந்த நாட்களில், அவருடைய மகத்துவமான 'தேவ ராஜ்ய' உபதேசங்களைக் கேட்டார்கள். சீஷர்களோடு தனித்திருக்கும்போது, அவைகளை அருமையாய் அவர்களுக்கு ஆண்டவர் விவரித்துச் சொன்னார். இது, அவருடைய உள்ளான தன்மையை சீஷர்கள் படிப்படியாய் அறிந்துகொள்ளச் செய்தது. "யாரிடத்தில் போவோம் ஆண்டவரே, நித்திய ஜீவ வசனங்கள் உம்மிடத்தில் உண்டே" என்று பேதுருவும், மற்ற சீஷர்கள் சொல்லவும் ஏதுவாயிற்று! அல்லேலூயா!*

*- S.பரமானந்தம்*

---

## 'கர்த்தரின் ஜெயத்திலிருந்து' போரிடும் அவரது வீரன்!

*தாவீது வென்றான், ஜெயமோ கர்த்தருடையது*

**தா**வீது, கோலியாத்தை வென்றான்! என நாம் நன்கு அறிந்திருந்தாலும், அவனைக் கொன்ற தாவீதோ "யுத்தம் கர்த்தருடையது!" என ஜெயத்தை கர்த்தருக்கே கொடுத்து, மகிமைப்படுத்தினான்! (1சாமு.17:47). சவுல் ராஜாவிற்கு முன்பாக தாவீது உரைத்த ஜெயமும், கர்த்தரைப் பற்றியதேயாகும்:

*"**ச**வுல் ராஜாவே, நான் ஆடுகளை மேய்த்துக்கொண்டிருந்தபோது, ஒரு விசை ஒரு சிங்கமும்! ஒரு விசை ஒரு கரடியும்! மந்தையிலுள்ள ஒரு ஆட்டை தூக்கிச் சென்றபோது, அதைத் தொடர்ந்துபோய், அதை அடித்துக்கொன்றேன்....." எனக் கூறிய, தாவீதின் முடிவான ஜெயத்தின் ஆர்ப்பரிப்பு என்னவென்றால் "என்னை சிங்கத்தின் கைக்கும், கரடியின் கைக்கும் என்னை தப்புவித்த கர்த்தர்!" என புகழ்பாடியதேயாகும்! (1சாமு.17:34,35,37). மேலும் "ஓ ராஜாவே, அன்றுபோலவே 'இன்றும்' இந்த பெலிஸ்திய ராட்சதனிடமிருந்து என்னையும், இஸ்ரவேலரையும் கர்த்தர் தப்புவிப்பார்!" என தாவீது முழக்கமிட்டான்.*

**" பொதுவாய், மனுஷன் தன் சுய பெலத்தை சார்ந்தே வெற்றிகாண முயற்சிக்கிறான்! "எனது பலம் என்றோ, குதிரையின் பலம் என்றோ!" கொண்டாடி மகிழ்வதே, இந்த உலகம்! (சங்.147:10,11). நாமோ, கர்த்தரையே சார்ந்துகொண்டு நிலைநிற்கிறோம்! ஜெயம் பெறுகிறோம்!**

*ஆகிலும், ஓர் நிர்விசாரமான ஒருவனோடு, கர்த்தர் துணைநின்று ஜெயம் தந்திட மாட்டார்! ஓர் ஆவிக்குரிய யுத்தத்திற்கு "தேவனுடைய சர்வாயுத வர்க்கத்தையும்" தீவிரமாய் தரித்து நிற்கும் வீரர்கள் மாத்திரமே "கர்த்தரிலும் அவருடைய சத்துவத்தின் வல்லமையிலும்*

*பலப்படுவார்கள்....பொல்லாங்கன் எய்திடும் அக்னியாஸ்திரங்களை, போரிடும் விசுவாச கேடகத்தால் அவித்துப்போடுவார்கள்!" (எபே.6:10,13,16). ஆகவேதான், "குதிரை யுத்தநாளுக்கு ஆயத்தமாக்கப்படும்! ஜெயமோ கர்த்தரால் வரும்!" என்பதை, மாறாத சத்தியமாய் நீதிமொழிகள் 21:21 கூறுகிறது.*

*எனவே, ஓர் உத்தம கிறிஸ்தவன் தன் ஜீவிய அனுபவத்தின் மூலம் கற்றுக்கொள்ளும் சத்தியம் யாதெனில், "நம்மைக் கொண்டுதான், தேவன் தன் பலத்த கிரியைகளை* **செய்து முடிப்பார்!** *அதே சமயம் 'தேவனேயன்றி' நம்மால் எதுவும்* **செய்திட முடியாது!**" *என்ற இரகசிய உறவேயாகும். ஆகவே, நமது யுத்தம் 'பெறப்போகிற வெற்றிக்கான' யுத்தம் அல்ல! அது ஏற்கனவே கர்த்தரால் ஜெயிக்கப்பட்ட 'வெற்றியிலிருந்து' முன்னேறிச் செல்வதே, நமது யுத்தம்! அல்லேலூயா.*

*- R.ஸ்டான்லி BYM*

---

## கர்த்தருடைய ஆலயத்தில் பரிசுத்தம் காக்கப்படுவதாக!

*'கர்த்தருடைய பார்வையில்' செயல்படும் ஊழியமே மேன்மை*

**எ**சேக்கியேல் தீர்க்கரிசியின் நாட்களில், ஆலயத்தின் நிர்ப்பந்த நிலையை, தேவன் அவருக்கு காட்டினார்! (எசே.44:1-4). தேவனுக்குப் பிரியமில்லாத "அருவருப்புகளையும் உடன்படிக்கை மீறுதலையும்" இஸ்ரவேல் ஜனங்கள் செய்வதையும், "விருத்தசேதனமில்லாத அந்நிய புத்திரரை" பரிசுத்த ஸ்தலத்திற்கு அழைத்து, ஆலயத்தைப் "பரிசுத்த குலைச்சலாக்கியதையும்" காண்பித்தார்!

> " **ஆலயத்தில் இத்தனை 'அருவருப்புகள்' சம்பவித்தும், அவர்களோடு லேவியரும் வழிதப்பி, தேவனை விட்டு தூரமாகிப்போனார்கள்! என்பதே, கர்த்தரின் மனவேதனையாய் இருந்தது! (வசனம் 10). அவர்களின் அக்கிரமத்தை இந்த லேவியர்களும் சுமப்பார்கள், என்றே கர்த்தர் எச்சரித்தார்! (வச.11,12).**

*__இ__தனிமித்தமாய் ஆலய ஊழியத்தில் "இரு சாராரை" கர்த்தர் பிரித்தெடுத்தார்! ஜனங்களுக்காக, ஜனத்தைப் பிரியப்படுத்த,* **ஜனத்திற்கு முன்பாக** *ஊழியம் செய்திடும் லேவியர்கள்! இவர்கள் ஆலயத்தின் வாசல் மாத்திரமே நின்று, 'ஜனங்களுக்குரிய பலிகளை' செலுத்தும் ஊழியத்தை செய்வார்கள்! அவர்களுக்கு ஏற்பட்ட மிகப்பெரிய நஷ்டம் என்னவென்றால், "அவர்கள் என் சமீபத்தில்" வர இயலாதபடி "கர்த்தருக்கு ஆசாரியராய்" இராமல், வெளிப் பிரகார ஊழியராய் இருப்பார்கள்! என கட்டளையிட்டார் (வச.13).*

*ஆ, இது துயரம்! நாம் வாழும் இந்த கடைசி நாட்களில், சபைகளில் சம்பவிக்கும் துயரம், எசேக்கியேலுக்கு கர்த்தர் காண்பித்த அவல நிலையாகவே உள்ளது!*

*'இன்று' ஜனங்களுக்கு முன்பாக, அவர்களைப் பிரியப் படுத்தி செய்திடும் ஊழியங்களே திரளாய் காண்கிறோம்! ஐசுவரியத்திற்காகவோ, தரிசனத்திற்காகவோ, 'வயிற்றிக்காக வாழும்' ஊழியத்திற்காகவோ, அன்ஜனம் பார்ப்பது போன்ற தீர்க்கதரிசனங்களுக்காகவோ, "ஜனத்தின் பரவசத்தால்" ஆட்கொள்ளப்படும் ஊழியர்கள் பெருகிவரும் கொடிய காலம் இது! தங்கள் விருப்பத்திற்கேற்ற ஊழியரில் மகிழ்ந்திருப்பதும், அந்த ஊழியரை சுற்றிவந்து, அவரைப் பிரியப்படுத்துவதுமே, இன்றைய பெரும்பாலான சபை மக்கள் 'தேவனை விட்டு விலகிய' கொடிய காலம்!*

*ஓர் நற்செய்தி என்னவென்றால், அதிகபட்சமான இஸ்ரவேல் புத்திரர் வழி தப்பிப்போகையில் 'பெரும்பான்மையில்' இழுக்கப் படாமல், கர்த்தரை அண்டி* **அவருக்கு முன்பாக ஊழியம்** *செய்திடும்* **"சாதோக்கின் புத்திரராகிய லேவியர்கள்"** *தேவனுக்கு இருக்கிறார்கள் என்பதுதான்! "கர்த்தரை கிட்டிச் சேர்ந்திடும்" பாக்கியம் இவர்களுக்கே உரியது! இவர்களே, 'பிதாவின் வீட்டைக் குறித்த பக்தி வைராக்கியம் கொண்டு' அவரது பரிசுத்த ஸ்தலத்தின் காவலை ஏற்றுக்கொண்டவர்கள் (வசனம் 15). இவர்களே, கர்த்தர் உரைத்திடும் பரிசுத்தத்தை கவனமாய் கேட்டு, பின்பற்றி வாழும் கர்த்தருடைய ஊழியர்கள்:*

1. கர்த்தருடைய சமூகத்தில் "வியர்வை உண்டாக்கும்" உடுப்பை உடுத்தாத வர்கள்! அதாவது 'மன சோர்வு' 'கவலை' போன்ற லௌகீக நெருக்கத்தை களைந்தவர்கள்!
2. தங்கள் தலைமயிரை சீராக வளர்த்து, கத்தரித்து கொண்டவர்கள்!
3. மதுபானத்திற்கு விலகியவர்கள்!
4. 'தள்ளிவிடப்பட்டவளை' (விவாகரத்து) விவாகம் பண்ணாதவர்கள்!
5. ஆலயத்திலுள்ள ஜனத்திற்கு பரிசுத்தமில்லாததையும், தீட்டானதையும் எச்சரித்து போதிப்பவர்கள்!
6. கர்த்தரே அவர்களின் சொத்து! அவரே அவர்களின் காணியாட்சி! என்ற உறவைப் பெற்றவர்கள் (எசே.44:18-28).

*இவ்வாறு, மகத்துவமான கர்த்தருடைய ஊழியத்தை, மகத்துவமாய் செய்து நிறைவேற்றும் 'இன்னும் அனேகரை' கர்த்தர் நம் தமிழ்நாட்டிற்குத் தந்தருள்வாராக! ஆமென்.* *- T.ரத்தினகுமார்*



## வாலிபத்தில், சாட்சியாய் மரித்த தியாகப் பெண்!

# கேத்தரின் (அலெக்சாண்ட்ரியா)

புறதேசத்து வாலிப பெண்ணாகிய இவள், படிப்பில் சிறந்த அறிவாளியாய் இருந்தார்! அலெக்ஸாண்ட்ரியா பட்டணத்தின் பேரரசர் 'மேக்ஸ்மியன்' ஆட்சியில் கவர்னராயிருந்த கான்ஸ்டஸ் அவர்களின் மகள்தான் இந்த கேத்தரின். தன்னுடைய பாலக பருவத்திலிருந்தே கல்வியில் ஆர்வம் காட்டிய சிறந்த அறிவாளி. இயேசுவின் தாயாகிய மரியாளும், அவரிடம் அவதரித்த இரட்சகர் இயேசுவையும் மனதால் தியானித்து, இரட்சகர் இயேசுவின் உயர்ந்த தரிசனத்தை மனதில் பெற்று ஓர் சீரிய கிறிஸ்தவ பெண்ணாய் மாறினாள். தேசத்தில் அங்குமிங்குமாய் கிறிஸ்துவுக்கு சாட்சிகள் எழும்பியபோது, அவர்களை பேரரசர் உபத்திரவப்படுத்தினார். கவர்னரின் மகளாயிருந்த கேத்தரின் துணிவுடன் நேரடியாக பேரரசர் அவைக்குச் சென்று, அவருடைய உபத்திரவப்படுத்தும் கொடுமையை கண்டித்து எடுத்துரைத்தார். ஆத்திரமடைந்த பேரரசர், இளம் கேத்தரினை சவுக்கினால் அடித்து சிறையிலடைத்தான். பலமுறை சவுக்கினால் அடிப்பட்ட கவர்னர் மகள் கேத்தரின் உடல் முழுவதும் இரத்தம் கொட்டியதைக் கண்டு சுற்றி நின்ற மக்கள் அனைவரும் கண்ணீர் வடித்தார்கள். ஆனால் கேத்தரினோ, தன் சரீர வாதையைக் குறித்து ஒரு துளியும் அஞ்சாமல், தன் கண்களை வானத்தை நோக்கி பதித்திருந்தாள். உணவு எதுவும் தராமல் பசியால் மாண்டு போகும்படி சிறையில் அடைத்து தண்டனை வழங்கினார். சிறைச்சாலையில் அவள் பெற்ற கிறிஸ்துவின் ஐக்கியத்தில் "நித்திய மகிமையான கிரீடத்தை நீ பெறுவாய்" என்ற வாக்குதத்தத்தை கிறிஸ்துவிடமிருந்து பெற்றாள்.

சிறைப்பட்ட கேத்தரினை சுமார் 200 ஜனங்கள் வந்து பார்த்தார்கள். அவ்வாறு பார்த்த ஜனங்களில் பேரரசரின் மனைவியும் வந்தார்கள். வந்த அனைவருமே கேத்தரின் கூறிய சுவிசேஷத்தைக் கேட்டு, கிறிஸ்துவுக்கு தங்களை ஒப்புக்கொடுத்தார்கள். துயரம் யாதெனில் இவ்வாறு கிறிஸ்துவுக்கு ஒப்புக்கொடுத்த 200பேரும் கொலை செய்யப்பட்டார்கள்! கோபத்தில், கேத்தரின் குகையில் அடைக்கப்பட்டாள்! 12 நாட்கள் கழித்து குகையை திறந்தபோது ஒரு பெரிய வெளிச்சம் அந்த குகையிலிருந்து தோன்றியது. அதிசய நறுமணம் குகை வாசலில் மணந்தது! கேத்தரின் பிரகாசமான முகத்தோடு வெளியே வந்தாள்!

பக்தியான கேத்தரினை எப்படியும் தன் வழிக்கு கொண்டு வரவேண்டும் என விரும்பிய பேரரசன், ஓர் சிறந்த வாலிபனை அவளுக்கு மணம் முடித்துவைக்க அறிவித்தான். அதை மறுத்த கேத்தரின், என்னுடைய மணவாளன் இயேசுகிறிஸ்து! என் முழு கன்னி தன்மையையும் அவருக்கே நான் அர்ப்பணித்துவிட்டேன் என முழங்கினாள். கடுங்கோபங் கொண்ட பேரரசன், இரும்பு வண்டி சக்கரத்தை அவள் மீது ஏற்றி, அவள் உடம்பின் எலும்புகளையெல்லாம் நொறுக்கும்படி கட்டளையிட்டான். வண்டிசக்கரம் அவள் மீது ஏறியஉடன், இரும்பு வண்டி சக்கரம் தூள் தூளாக விழுந்து விட்டது! கோபத்தில் கண் சிவந்த பேரரசன் அவள் தலையை துண்டிக்க கட்டளையிட்டான். கொடு வாளோடு வந்த வீரர்களைப் பார்த்து தைரியமாய் "உங்கள் கட்டளையை நிறைவேற்றுங்கள்" என அவர்களை ஆணையிட்டு, இரத்த வெள்ளத்தில் கிறிஸ்துவுக்கு சாட்சியாய் உயிர் நீத்தாள்!

- நன்றி (கர்த்தருக்கு பலியான தீரர்கள் புத்தகம்)

## வாலிப பெண்ணே, உன்மீது இயேசு கரிசனையாய் உள்ளார்!

ரூத் என்ற மோவாபிய விதவையின் வம்சாவழியில் ஆண்டவராகிய இயேசு பிறந்தார், என்பது உங்களுக்குத் தெரியுமா? இயேசு ஒருபோதும் 'பெண் குலத்தை' குறைத்து மதிப்பிட்டதோ அல்லது புறக்கணித்ததோ இல்லை! மாறாக, அவர்களை தமது ஊழியத்தில் கனப்படுத்தி வாழ்ந்தார்!

மனுமக்களின் பாவம் போக்க மானிடனாக அவதரித்த, அன்பின் தேவகுமாரன், தான் சிசுவாக இருந்தபோது, ஒரு கன்னிப் பெண்ணின் அரவணைப்பில் அமுதுண்டு வளர்ந்தார்! ஆம், கன்னியின் கர்ப்பத்தை அவர் அருவருக்கவில்லை! இயேசு தன் ஊழியத்தில், பெண் மக்களுக்கு அதிக இடம் கொடுத்தார்! அவருடன் அநேக ஸ்திரீகள் ஊழியத்திலே இருந்ததாக தேவனுடைய வார்த்தை கூறுகின்றது (லூக்கா 3:8). பெண் குலத்தின் சுகத்தையும், சந்தோஷ சமாதானத்தையும் நேச இரட்சகர் மனதார விரும்பினார் என்பதை "உன் வேதனை நீங்கி சுகமாயிரு" (மாற்கு 5:34) என்று 'தன்னைத் தொட்ட பெரும்பாடுள்ள ஸ்திரீக்கு' சொன்னதிலிருந்து நாம் தெளிவாக கண்டு கொள்ளுகின்றோம்!

சிலுவையில் மரித்த நம் அன்பின் நேசர், "தான் மரித்தாலும் பிழைத்திருப்பதை" முதன் முதலில் ஒரு பெண்ணுக்குத்தான் வெளிப்படுத்தினார்! அவளை துன்பப்படுத்தி, தினமும் அவளை சித்தரவதை செய்து கொண்டிருந்த 7 பிசாசுகளையும் கூட, அவர் அவளிடமிருந்து ஏற்கெனவே துரத்தியிருந்தார்!

பெண் குலத்தின் பேரில், இரட்சகர் எத்தனை கரிசனையாக இருந்தார் என்பதற்கு அவர் சிலுவையில் தொங்கும் அந்த கடைசி நேரத்தில், தனது அருமை தாயாருக்கு, தனது அன்பான சீஷன் ஒருவனின் மூலமாகக் கொடுத்த ஜீவிய ஆதரவை நாம் காண்கின்றோம்!

இந்தப் பாழ் உலகத்தில் ஆண், பெண் என்ற பாகுபாடுகள் இருப்பினும், நாம் நாடிச்செல்லும் பரலோகத்தில் அவை ஒன்றும் கிடையாது! அங்கே கொள்வனை, கொடுப்பனை எதுவும் இல்லை. அந்த பேரின்ப வீட்டில், நாம் எல்லாரும் தேவ தூதர்களாக மாற்றம் பெற்று, நமது ஆத்தும மணவாளனாம் இயேசுவை, என்றுமுள்ள சதாகாலங்களிலும் புகழ்ந்து போற்றி, பாடித் துதித்துக் கொண்டிருப்போம்! அல்லேலூயா.

- சுவிசேஷ மலர்

சந்தா அனுப்ப
QR பயன்படுத்தவும்

பரலோக பொக்கிஷங்கள்

Published and Owned by:
Madurai Christian Fellowship, Regd Society,
*Editor* T.Rathnakumar, Madurai.
Printed by SFA Print (P) Ltd., Sivakasi.

maduraichristianfellowship
@indianbk